# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 094/மா/2018

ஆணை எண். 112/2018

நாள் : 02/05/2018

திரு M. லெட்சுமணப் பெருமாள்,
மதுரை – 1. – முறையீட்டு மனுதாரர்கள்

மாநகராட்சி ஆணையர்,
மதுரை மாநகராட்சி,
மதுரை. – எதிர் மனுதாரர்

மதுரை, தெற்கு வாசல், சின்னக்கடைத் தெரு, எண்.18,19, சாமி ஆசாரி சந்து முகவரியில் வசிக்கும் திரு M. லெட்சுமணப் பெருமாள் அவர்களின் 26.03.2018 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 094/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்து. முறையீட்டு மனுதாரரின் மனு பரிசீலிக்கப்பட்டுக் கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

மதுரை, தெற்கு வாசல், சின்னக்கடைத் தெரு, எண்.18,19, சாமி ஆசாரி சந்து முகவரியில் வசிக்கும் திரு M. லெட்சுமணப் பெருமாள் என்பவர், தனக்குப் பூர்வீகமாகப் பாத்தியப்பட்ட கட்டடத்திற்கு இரண்டு சொத்துவரிகள் இருப்பதை ஒரே சொத்துவரியாக முறைபடுத்தக்கோரி, மதுரை மாநகராட்சி ஆணையருக்கு முறையீடு செய்துள்ளார். மேற்குறிப்பிட்ட முறையீட்டு மனுவின் நகலினை இம்முறைமன்ற நடுவத்திற்கும் சமர்ப்பித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் கோரிக்கையினை உரிய ஆவணங்களின் அடிப்படையில் முறையாகப் பரிசீலித்து மேற்குறிப்பிட்ட கட்டடத்திற்கான சொத்து வரியினை முறைபடுத்துமாறு மதுரை மாநகராட்சி, 3–வது மண்டல உதவி ஆணையாளருக்கு அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2018– ஆம் ஆண்டு, மே திங்கள், 2–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்

பெறுநர்

1. உதவி ஆணையாளர்,
மண்டலம் – 3,
மதுரை மாநகராட்சி,
மதுரை.

2. மாநகராட்சி ஆணையர்,
மதுரை மாநகராட்சி,
மதுரை.

3. திரு M. லெட்சுமணப் பெருமாள்,
18,19, சாமி ஆசாரி சந்து,
சின்னக்கடைத் தெரு,
தெற்கு வாசல்,
மதுரை – 1.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பிரிவு அலுவலர்(நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்